# பொருளடக்கம்

1. பேரிடர் மற்றும் ஆபத்து காலங்களில் பயன்படும் ஆளில்லா விமான கோள்களின் வடிவமைப்பு மற்றும் சமூக பயன்பாடு ........ 1

2. சட்டரீதியிலான அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு ........ 4

3. தமிழ்நாடு காவல் துறைக்கான எம்–கடவுச்சீட்டு செயலித் திட்டம் ........ 5

4. இருதயப் பாதுகாப்பிற்காக ஹப் மற்றும் ஸ்போக் மாதிரி ........ 6

5. இரத்த சுத்திகரிப்பு திட்டம் மற்றும் சாதனை ........ 8

6. கொசுக்களில் டெங்கு வைரஸை கண்டுப்பிடிப்பதன் மூலம் நோய் பரவுதலை தடுக்க தமிழ் நாட்டில் புதிய திட்டம்........ 10

7. சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி ........ 11

8. மா, கொய்யா மற்றும் முருங்கையில் உயர் அடர் நடவு உற்பத்தி ........ 12

9. வண்ண மீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா ........ 13

10. மோட்டார் பொருத்தப்பட்ட ஜக்கார்ட் லிப்டிங் இயந்திரங்கள் ........ 14

11. கோ–ஆப்டெக்ஸை முக்கிய விற்பனை நிலையங்களாக மாற்றி நிலை நிறுத்துதல் ........ 15

12. அங்கன்வாடி மையங்களுக்கு தர அங்கீகார சான்றிதழ் வழங்குதல் ........ 16

13. மின்னனு நூலகம் உருவாக்குதல் ........ 17

14. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி VIII முதல் XIII வரை மற்றும் 20 மாணவர்கள் ஆய்வேடுகள் அச்சிட்டு வெளியிடுதல் ........ 18

15 . சமுதாய உதவி மையம் ........ 19

# 1. பேரிடர் மற்றும் ஆபத்து காலங்களில் பயன்படும் ஆளில்லா விமான கோள்களின் வடிவமைப்பு மற்றும் சமூக பயன்பாடு

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு புத்தாக்க நிதியத்தின் மூலம் இயற்கைப்பேரிடர் மற்றும் சமுதாய பணிகளுக்காக ஆளில்லா விமான கோள்களை வடிவமைக்க ரூ.20 கோடி உயர்கல்வி துறையின் கீழ் இயங்கும் அண்ணா பல்கலை கழகத்திற்கு ஒதுக்கப்பட்டது.



அண்ணா பல்கலைக்கழக வான்வெளி ஆராய்ச்சி மையம் பல்வேறு வகையான ஆளில்லா விமான கோள்களை உருவாக்கி வருகிறது. இவைகள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணிகளுக்கும், கூட்ட நெரிசலை கட்டுபடுத்தவும், போக்குவரத்து இடையூறுகளை கண்காணிப்பதற்கும் நெறிபடுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.


அகச்சிவப்பு பட்டை தொழில் நுட்பத்தை உள்ளடக்கிய ஆளில்லா விமான கோள் கட்டிட இடர்பாடுகளில் சிக்கியவர்களையும், இயற்கை பேரழிவில் சிக்கி தவிப்போரையும் எளிதில் கண்டறிந்து உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான விமானங்களை 2015–ஆம் ஆண்டு சென்னை பெருவெள்ளத்தின் போதும், 2016–ஆம் ஆண்டு வர்தா புயலின் போதும், மக்களின் பாதுகாப்பு பணிகளில் பயன்படுத்தப்பட்டது. 2018–ஆம் ஆண்டு கஜா புயலின் போது ஏற்பட்ட சேதாரங்களை துல்லியமாக மதிப்பீடு செய்ய இக்கோள்களின் தகவல்கள் மற்றும் தரவுகள்அடிப்படையில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க மாநில அரசுக்கு பெரும்பங்காற்றியுள்ளது. குரங்கனி காட்டு தீ விபத்தின் போது பொதுமக்களை காட்டுத் தீ பாதிப்பிலிருந்து காப்பற்ற இவை பயன்படுத்தப்பட்டது. வெள்ள தடுப்புக்கு தேவையான வான்வெளிப் படங்களை ஆளில்லா விமான கோள் மூலம் எடுக்கவும், நீர் பிடிப்பு பகுதிகளைக் கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை நீக்கவும், தடைப்பட்ட நீர்நிலை வழிதடங்களை செப்பனிடவும் பயன்படுத்தப்பட்டது.



ஆளில்லா விமானங்களின் மூலம் பெறப்படும் புகைப்படம் செயற்கைகோள் புகைப்படத்தை காட்டிலும் அதிக திறனுடையதால், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக 55 நாடுகள் பங்கேற்ற ஆளில்லா விமான கோள் போட்டியில் அண்ணா பல்கலைகழகம் பங்கேற்று மருத்துவ மாதிரிகளை சுமந்துக் கொண்டு சுமார் 60 கிலோமீட்டர் தூரத்தினை மிக குறைந்த நேரத்தில் கடந்த உலகின் ஒரே அணி என்ற பெருமையை பெற்றது. தமிழக மாணவர்கள் இது போன்ற கருவிகளை மேம்படுத்துதல் மற்றும் தயாரித்தல் போன்ற ஆராய்ச்சியில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.





DH - VTHT



HELICOPTER



FIXED WING



TETHERED UAV



QUADCOPTER



## 1.வேளாண்மை

- பயிர் பாதுகாப்பு கண்காணிப்பு
- உரம் மற்றும் பூச்சி மருந்து தெளித்தல்



## 2. ஆற்றல் மற்றும் சக்தி

- எரிவாயு குழாய் கசிவை கண்டறிதல்
- மின் கோபுர பழுதினை கண்டறிதல்




## 3. போக்குவரத்து மற்றும் சரக்கை கையாளுதல்

- சரக்கு போக்குவரத்து
- வான்வழி அவசர ஊர்தி
- தீயணைப்பு




## 4. நகர்புற திட்டமிடல்

- நகர அளவீடு மற்றும் திட்டமிடல்
- சொத்துவரி மதிப்பீடு



## 5. உள்நாட்டு பாதுகாப்பு

- எல்லை பாதுகாப்பு மேலாண்மை
- போக்குவரத்துக் கண்காணிப்பு
- பேரிடர் மேலாண்மை



## 6. வனவியல்

- மெய்நிகர் சுற்றுலா
- வனவிலங்கு பாதுகாப்புக்காக வனப்பகுதி கண்காணிப்பு
- காட்டுத் தீ கண்டறிதல்




## 7. தொலை உணர்வு

- புவியியல் தகவல் அமைப்பு
- தொலை நிலை தரவு கையாளுதல்

# 2. சட்டரீதியிலான அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு






இத்திட்டத்தின் மூலம் வாங்கும் பொருட்களின் அளவு தரம் மற்றும் விற்பனை குறித்து சட்டப்படியான நடவடிக்கைகளை முழுமையாக கையாண்டு நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சட்ட ரீதியான செயலி ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 04.03.2017 அன்று துவக்கிவைக்கப்பட்டு தொழிலாளர் துறை மூலமாக தமிழக அரசின் புதுமை முயற்சிகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து பல வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயனாக 36,150 பயனாளிகள் இக்கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர். இச்செயலியின் மூலம் 1392 புகார்கள் நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றில் 262 முரண்பாடுகள் துரிதமாக களைந்து சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் இருந்து அபராத கட்டணமாக ரூ.7,76,313 வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிற துறையை சார்ந்த 764 புகார்கள் இக்கைபேசி செயலி மூலம் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அலுவலக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

உலக அளவில் அரசாங்கங்கள் ஒளிவு மறைவு இன்றி நுகர்வோருக்கு பாதுகாப்பையும் வழங்கவும் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் இருந்து பொதுமக்களின் பாதுகாப்பை நீடித்த வளர்ச்சி இலக்கு 16.6 னை அடைவதற்கு பயன்படுகிறது.

# 3. தமிழ்நாடு காவல் துறைக்கான எம்–கடவுச்சீட்டு செயலித் திட்டம்

பொதுமக்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தேவைப்படும் கடவுச் சீட்டினை எந்தவித சிரமமுமின்றி காவல் துறை சரிபார்ப்பில் எவ்வித காலதாமதமும் இல்லாமல் மிக விரைவாக கடவுச் சீட்டினை வழங்குவதற்கு எம்–கடவுச்சீட்டு செயலி உருவாக்கப்பட்டுள்ளது.




இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் இத்திட்டம் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டு, கடவுச் சீட்டு கோரியவரின் தகவல்களின் அச்சுபிரதி தபால் மூலம் குறிப்பிட்ட காவல்நிலையத்திற்கு அனுப்புவதற்கு மாறாக கடவுச் சீட்டு கோரியவரின் தகவல் தொகுப்பு எம் கடவுச்சீட்டு செயலி வாயிலாக அனுப்பி 6 நாட்களுக்குள் காவல்துறையிடம் இருந்து கடவுச் சீட்டு சரிபார்ப்பு அறிக்கை பெறப்படுகிறது. இதனால் காகித பயன்பாடு பெரிதளவில் குறைந்துள்ளது மட்டுமல்லாமல் குறுகிய காலத்தில் சரிபார்ப்பு சான்றிதழ் அளிக்கப்படுவதால் ஊக்க தொகை ரூ. 50ல் இருந்து ரூ.150 ஆக அதிகரித்துள்ளது. துரித கடவுச் சீட்டு வழங்கும் முறையால் ஏறக்குறைய ரூ.1.6 கோடி அளவுக்கு ஆண்டு வருமானம் கூடுதலாக அரசு ஈட்டியுள்ளது.



Government of India
Ministry of External Affairs
Certificate of Recognition
awarded to
Tamil Nadu Police
by
Smt. Sushma Swaraj, Hon'ble External Affairs Minister
on the occasion of Passport Seva Divas, the 26th June 2018 at New Delhi.
for
implementing m-Police App for verification of passport applicants.


(Arun Kumar Chatterjee)
Joint Secretary (PSP) &
Chief Passport Officer

Passport Seva
Service Excellence




இத்திட்டத்தினை வெற்றிகரமாக காவல் துறையின் வாயிலாக செயல்படுத்தி பொதுமக்களின் வரவேற்பை பெற்றதுடன் மைய அமைச்சக வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் அவர்கள் இத்திட்டத்தினை அங்கீகரித்து 27.06.2018 அன்று நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்.

# 4. இருதயப் பாதுகாப்பிற்காக ஹப் மற்றும் ஸ்போக் மாதிரி



திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2019 மார்ச் 29 ஆம் தேதி இருதய இரத்த வடிகுழாய் ஆய்வகத்தில் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட 66 வயது ஆண் நோயாளிக்கு விரிதன்மையுடைய குழல் மற்றும் தற்காலிக இருதய முடுக்கி (Temporary Pacing) பொருத்துதல்

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பராமரிப்பு திட்டம் (TAEI-MI), மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ரத்தக்குழாய் மறுசீரமைப்படைய மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான நெறிப்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகளை ஏற்படுத்தி ரத்த ஓட்டம் மறுசீரமைவதில் மருத்துவமனை தரப்பிலோ அல்லது நோயாளிகள் தரப்பிலோ எவ்வித தாமதமும் இல்லாமல் உயிர் காப்பது ஆகும்.

தேசிய நலக்குழுமத்தின் வாயிலாக, முதல் தவணையாக 12 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் இருதய இரத்த வடிகுழாய் ஆய்வக (கேத்–லேப்) மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது, தற்போது நமது சுகாதார அமைப்பில் தாமதத்தை குறைக்க, ஹப் மற்றும் ஸ்போக் மாதிரியினை உருவாக்க ஒவ்வொரு ஹப் மருத்துவ நிலையத்திற்கும் 8 முதல் 10 ஸ்போக் மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு TAEI – MI என்ற குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்றவாறு 108 அவசர ஊர்திகளுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு, நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போதே, நோயாளியின் ஈ.சி.ஜியை இதய மருத்துவருக்கு அனுப்பி, உரிய நேரத்தில் ரத்த ஓட்ட சிகிச்சை பெறுவதற்கான அறிவுரையை பெற்று ஊர்தியிலேயே சிகிச்சையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.




ஹப் ஸ்போக் மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு TAEI – MI குழுமம்



தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகளின் திட்டத்தின் கீழ் (TANII) ஹப் மற்றும் ஸ்போக் மருத்துவமனை ஒருங்கிணைப்பை வலுப்படுத்த ரூ.925.20 இலட்சம் நிதி வழங்கப்பட்டு நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டவர்கள் 108 அவசர ஊர்தியின் வாயிலாக ஸ்போக் மருத்துவமனைக்கு சென்றவுடன் 10 நிமிடத்தில் ஈ.சி.ஜி எடுக்கப்படுமெனவும், பின் நேரடியாக ஹப் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உயர்சிகிச்சை வழங்கவும், ஒருவேளை நோயாளியை கொண்டு செல்லும் நேரம் 30 நிமிடத்திற்கு அதிகமானால், ஸ்போக் மருத்துவமனையிலேயே ரத்த உறைதல் கரைதலுக்கான மருந்து செலுத்தி, நோயாளி நிலைப்படுத்தப்பட்டு 24 மணி நேரத்திற்குள் ஹப் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு ஊடுருவல் சிகிச்சை செய்யப்படும். இந்நிகழ்வில் உயர் மருத்துவமனைகள் தயார் நிலையில் இருக்கும் பொருட்டு முன்தகவல் அழைப்பு (Pre-arrival Intimation) தரப்படுகிறது.

அனைத்து சுகாதார பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தியதால் தொடக்க நிலை பலூன் ஆஞ்சியோபிலாஸ்டி, மருந்து மற்றும் ஊடுருவல் சிகிச்சை தமிழ்நாட்டின் அனைத்து தரப்பினருக்கும் கிடைப்பதை சாத்தியப்படுத்தியுள்ளது.



செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரத்த நாள அடைப்பு நீக்குதல்

# 5. இரத்த சுத்திகரிப்பு திட்டம் மற்றும் சாதனை

2016 ஆம் ஆண்டு நாட்டின் ஆரோக்கியக் குறியீடு – மாநிலங்களின் அறிக்கையின்படி தமிழ்நாட்டில் மிக அதிகமாக நாள்பட்ட சிறுநீரக நோயினால் 1000 ஆட்களுக்கு 35 இறப்புகளும், அவ்வாறு இறந்தவர்கள் இந்நோயினால் இயலாமையுடன் கூடிய ஆயுட்காலம் (DALY - Disability Adjusted life Year) 1026 ஆகவும் உள்ளது. சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சைக்கு பெரிய அளவிலான கட்டமைப்பு, மிகுந்த செலவினம், சிறப்பு நிபுணத்துவம், அதிக விலையில் நோய் எதிர்ப்புத் திறன் ஒடுக்க மருந்துகள் தேவைப்படுவதாலும், நீண்ட காத்திருப்பு நபர்கள் பட்டியல் இருப்பதாலும், தகுதிவாய்ந்த சிறுநீரக கொடையாளர்கள் குறைவாக இருப்பதாலும், இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைக்கான தேவை தமிழகத்தில் அதிக அளவில் உள்ளது. தமிழகத்தில் 1000–க்கும் மேற்பட்ட இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மையங்களில், பெருமளவு மையங்கள் தனியார் வசம் உள்ளது. இதற்கு தமிழக அரசு மருத்துவமனைகளில் போதிய அளவு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை வசதிகள் இல்லாததே காரணமாகிறது.





தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் 100 இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்துடன் எதிர் சவ்வூடு பரவல் முறையில் இயங்கும் நீர் வடிகட்டியும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. தேசிய நல்வாழ்வுத் திட்டம் நோயாளிகளுக்கு அவர்களது வாழ்விடத்திற்கு அருகிலேயே உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை வசதிகளை விரிவுபடுத்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது.


பொதுவாக சிறுநீரக நோயாளிகள் வாரத்திற்கு 2 அல்லது 3 முறை இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்ளவேண்டும். பெரிய நகரங்கள் மற்றும் மருத்துவமனைகளில் மட்டுமே இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை வசதி இருப்பதால் மத்திய மற்றும் மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் மாதிரி சிகிச்சை திட்டத்தை பிற மாநிலங்கள் செயல்படுத்திய நிலையில் தமிழக அரசு முன் மாதிரியாக மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் தாலுக்கா மருத்துவமனைகளில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மையங்களை சிறப்பாக நடத்தி வருகிறது.



உயர்ந்த தரத்தில் சிறுநீரக சிகிச்சை சேவையாற்ற தமிழ்நாடு அரசு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை மையங்களை மாவட்டம் தோறும் அமைத்துள்ளது பொது மக்களுக்கு சிறந்த வரமாக உள்ளது. கடந்த 2018–19 ஆம் நிதி ஆண்டில் 3988 நோயாளிகளுக்கு 2,66,963 முறைகள் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவக் காப்பீட்டுத் திட்ட புள்ளிவிவரங்களின்படி அரசு மருத்துவமனைகளில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டில் 5.4 சதவீதமாக இருந்தது, 2019 ஆம் ஆண்டில் 18.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.


# 6. கொசுக்களில் டெங்கு வைரஸை கண்டுப்பிடிப்பதன் மூலம் நோய் பரவுதலை தடுக்க தமிழ் நாட்டில் புதிய திட்டம்

உலக அளவில் மனிதர்களை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்றான டெங்கு காய்ச்சல், டெங்கு வைரஸ்களால் கொசுக்களின் மூலமாக மனிதர்களுக்கு பரவும் நோய். ஆரம்ப நிலையிலேயே இந்த டெங்கு வைரஸ் தாக்கம் கண்டறியப்படாததால், வருடந்தோறும் பெருமளவில் மக்களிடையே நோயுற்ற தன்மையை அதிகரித்து இறப்பினையும் ஏற்படுத்துகிறது.










டெங்கு காய்ச்சலை குணப்படுத்த மற்றும் நோய் பரவாமல் தடுக்க மருந்துகளோ, தடுப்பூசிகளோ இல்லாத சூழ்நிலையில், எளிதில் டெங்கு மூலம் நோய் பரவக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு, நோய் கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கைப் பணிகளை தீவிரப்படுத்துவதன் மூலமே இந்நோயினைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

குறிப்பாக மனிதர்களை டெங்கு வைரஸ் தாக்கி பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு முன்பே, டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களில் டெங்கு வைரஸ் உள்ளதா என்பதை கண்டுபிடிக்கும் புதிய திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் நிதி உதவியுடன் பொது சுகாதாரத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்வாயிலாக, பிரத்யேகமாக ஆய்வு கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் வேதி பொருட்கள் வழங்கப்பட்டு கொசுக்களில் டெங்கு வைரஸ்களை கண்காணிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த புதிய திட்டத்தின் மூலமாக டெங்கு நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு பணிகள் தீவிரப்படுத்தப்படுவதுடன் மனிதர்களுக்கு டெங்கு நோயின் தாக்கம் தமிழகத்தில் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

# 7. சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி





தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2023 ல் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான புதுப்பிக்க தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிக்க இத்திட்டத்தின் வாயிலாக சூரிய சக்தியின் பயன்பாட்டை பரவலாக்கி வழக்கத்திலுள்ள மின் நுகர்வு மற்றும் மின் கட்டண செலவை குறைப்பதுடன் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவைக்கு போக மீதமுள்ள கூடுதல் மின் உற்பத்தியை இருவழி மின்அளவு மானி வழியாக மின் தொகுப்பிற்கு அனுப்பி வருவாய் ஈட்டுதல் மற்றும் கார்பன்வெளியீட்டினைக் குறைத்து சுற்றுச் சூழலை பாதுகாத்தல்.

சூரிய சக்தியின் பயன்பாட்டினை பரவலாக்கும் வகையில் முன் மாதிரி முயற்சியாக, தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அலுவலக மேற்கூரையில் சூரிய ஒளி தடையின்றி பெறக்கூடிய 600 ச.மீ பரப்பில் 30 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் அமைப்பு ரூ.20.17 இட்சம் செலவில் 31.03.2016–ல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் இருவழி மின் அளவு மானி (Net Meter) மார்ச் 2017ல் பெறப்பட்டு இவ்வமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கில் மாநிலத்தின் பங்கு அதிகரித்துள்ளது.

இத்திட்டத்தினால் வடிவமைக்கபட்ட சூரிய சக்தி மூலம் மாதம் ஒன்றிற்கு சராசரியாக 3030 அலகு மின் உற்பத்தி செய்யப்பட்டு மாதம் ஒன்றிற்கு 40 சதவீதம் மின் நுகர்வு மற்றும் 50 சதவீத மின் கட்டண சேமிப்பும் பெறப்படுகிறது

# 8. மா, கொய்யா மற்றும் முருங்கையில் உயர் அடர் நடவு உற்பத்தி

உயர் அடர் நடவு உற்பத்தி தொழில் நுட்பத்தின் மூலம் மா மற்றும் கொய்யாவில் உற்பத்தி திறனை மூன்று முதல் நான்கு மடங்கு பெருக்கி சாதாரண நடவு முறையை விட பயிர் எண்ணிக்கையை அதிகரித்தல், கிளை படர்வு மேலாண்மை மேற்கொள்ளுதல், சொட்டுநீர், நீர் வழி உரமிடுதல், நிலப்போர்வை மற்றும் பண்ணைக் கருவிகளைக் கொண்டு சீர்மிகு சாகுபடி செய்யும் முறை போன்ற தொழில்நுட்பம் மக்களை சென்றடைந்துள்ளது மேலும் கூட்டுப் பண்ணையம், விவசாய குழுக்கள், நகர்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

மா உற்பத்தியில் உழவர்களின் வழக்கமான முறையான 10 மீ × 10 மீ (எக்டருக்கு 100 செடிகள்) நட்டபோது மா உற்பத்தி எக்டருக்கு 9 டன்களாகவும் உயர் அடர் நடவு முறையில் 3 மீ × 2 மீ இடைவெளி விட்டு நடும் போது (எக்டருக்கு 1666 செடிகள்) எக்டருக்கு 35 – 37 டன்கள் பழ மகசூலும் கிடைக்கிறது. இதுபோன்றே, கொய்யா மற்றும் முருங்கையில் உயர் அடர் நடவு முறையில் எக்டருக்கு அதிக மகசூல் மற்றும் விகிதாச்சாரம் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கொய்யா பழ வகை, ஆயக்குடி, திண்டுக்கல், தேனி, மதுரை, பகுதிகளில் சுமார் 104 ஏக்கர் பரப்பிலும் மா பழ வகை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் 92 ஏக்கர் பரப்பில் முருங்கை இலை சாகுபடி மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் செய்யப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் வாயிலாக விவசாயிகளின் பண்ணை வருமானம் மும்மடங்காகவும் மா, கொய்யா மற்றும் முருங்கை இலை உற்பத்தித்திறனும் அதிகரித்துள்ளது.

இப்புதுமை தொழில் நுட்பத்திற்கு 2018–2019 மகேந்திரா சம்ரிதி தேசிய விருது மற்றும் ரொக்க பரிசாக ரூ.2.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பது வெற்றியின் சாதனையாகும்.







# 9. வண்ண மீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா





வண்ண மீன் வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கத்திற்கு தேவையான சினை மீனை உற்பத்தி செய்தல் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டமானது இந்திய அளவில் தமிழ்நாட்டில் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு போன்ற நீர் பற்றாக்குறை உள்ள மாநிலத்தில், மீன் வளர்ப்பானது அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட தொடர் சுழற்சி முறையினை பின்பற்றி குறைவான இடவசதியில் அதிக மீன்களை உற்பத்தி செய்ய முடியும்.

விலை உயர்ந்த வண்ண மீன்களை வளர்ப்பதற்கும் அவற்றிற்கு தேவையான உயிரி உணவுகளை உற்பத்தி செய்வதற்காகவும் 10 சிறிய பொரிப்பகங்களையும் 10 குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால் அமைப்பும் 8 வளர்ப்பு அமைப்புகளும் மற்றும் 2 உயிரி உணவு வளர்க்கும் பிரிவுகளும் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த அமைப்பினை 9 மீனவ சங்கங்கள் பயன்படுத்தி வருகின்றன. இவர்கள் விலை உயர்ந்த அலங்கார மீன்களின் இனப்பெருக்கத்தினை தரப்படுத்தி வருடம் முழுவதும் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றனர். இதுவரை 20 புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு அவை பயனாளிகளுக்கு செயல்முறை பயிற்சி வகுப்பு மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உயர்ரக வண்ண மீன்களை தாக்கும் நோய் கண்டறிதல் மற்றும் அதற்கான சிகிச்சை முறைகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

# 10. மோட்டார் பொருத்தப்பட்ட ஜக்கார்ட் லிப்டிங் இயந்திரங்கள்



தமிழ்நாடு, கைத்தறியில் நெய்யப்படும் ஆடை ரகங்களை தனித்தன்மையுடனும் நீண்ட பாரம்பரியத்துடனும் உற்பத்தி செய்வதில் முக்கிய இடத்தைப் பிடித்து பெருமையுடன் விளங்குகிறது.

கைத்தறி துறையில் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளில் புதுப்புது தொழிநுட்ப உபகரணங்கள் தொடர்ந்து அறிமுகப்படுத்தி சிக்கலான வடிவமைப்புகளை உற்பத்தி செய்வதில் நெசவாளர்கள் பணிகளை ஜக்கார்ட் இயந்திரம் எளிமைப்படுத்தியுள்ளது. தற்போதுள்ள அமைப்பில் நெசவாளர்கள் ஜக்கார்ட் இயந்திரத்தினை கால்களால் பெடலை அழுத்துவதன் மூலம் இயக்கப்படுகிறது. ஆனால் தறியில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் ஜக்கார்ட் இயந்திரம் மூலம் பெடலை தூக்கும் செயல்முறையை எளிதாக்கியுள்ளது. மேலும் இது நெசவின்போது துணிகளில் உள்ள சிக்கலான வடிவமைப்பை மாற்றி பணி செய்யும் முறையினை இலகுவாக்குகிறது.



2015–16 ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளில் 6000 மோட்டார் பொருத்தப்பட்ட ஜக்கார்ட் லிப்டிங் இயந்திரங்கள் ஒரு யூனிட்டுக்கு ரூ.15,000/– வீதம் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டது. குறைந்த விலையில், ஒலி குறைவாக இயங்கும் தன்மையும், குறைவான இடவசதியில் இயங்கும் தன்மையும், பராமரிப்பு செலவு மற்றும் குறைந்த மின்னாற்றலை பயன்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. எனவே நெசவாளர்களின் பணிச் சுமை குறைந்து உற்பத்தி திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும் நெசவாளர்களின் வருமானத்தின் அளவும் அதிகரித்து நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

# 11. கோ–ஆப்டெக்ஸை முக்கிய விற்பனை நிலையங்களாக மாற்றி நிலை நிறுத்துதல்

கோ–ஆப்டெக்ஸ், தனது விற்பனை நிலையங்களை உயர்ந்ததரம் மற்றும் தனித்துவத்துடன் அதிக விற்பனை செய்யும் முக்கிய விற்பனை நிலையங்களாக மாற்றியமைத்துள்ளது. பெரும்பாலான வாடிக்கையாளர்கள் கைத்தறி ஆடை அணிவதன் வசதிகளையும் சுகத்தையும் ஒப்பீடு செய்து கைத்தறி ஆடைகளை அதிகம் விரும்புகின்றனர். இதனால், கைத்தறி ஆடைகளின் தேவை சீரான முறையில் வளர்ச்சி கண்டுவருகிறது.

கோ–ஆப்டெக்ஸை புதுப்பித்து நிலை நிறுத்துவதன் மூலம் மக்கள் தொகையில், ஆடைகளுக்காக அதிகம் செலவிடும் வயதினராக உள்ள 20–49 பிரிவினரை கோஆப்டெக்ஸை அதிகம் விரும்பும் வண்ணம் மாற்ற இயலுகிறது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை முக்கிய நிலையங்களாக மாற்றியமைக்க ரூ.1.20 கோடி அனுமதிக்கப்பட்டதில், புதுடெல்லி, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் கொச்சி ஆகிய நகரங்களிலுள்ள 4 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி நாளுக்குநாள் விற்பனை சதவீதம் மூன்று மடங்கு உயர்ந்துள்ளதுடன் உற்பத்தி திறனும் அதிகரித்துள்ளது.



கோ–ஆப்டெக்ஸ் அஷ்டலக்ஷ்மி, சென்னை – நவீனப்படுத்தப்படுத்தவதற்கு முன்




கோ–ஆப்டெக்ஸ் அஷ்டலக்ஷ்மி, சென்னை – நவீனப்படுத்தப்பட்டதற்கு பின்

# 12. அங்கன்வாடி மையங்களுக்கு தர அங்கீகார சான்றிதழ் வழங்குதல்


BMSCERT
Quality Assessors

CERTIFICATE OF REGISTRATION

*This is to certify that the Quality Management System of*

**ANGANWADI CENTER**
Perumal Kovil East Street, Reddiyar Patti (Near by Library), Tirunelveli – 627 007. Tamilnadu, India.

*has been assessed and approved in accordance with the guidelines of*

ISO 9001:2015

*for the following areas*

**Providing Supplementary Nutrition, Immunization, Health Check-up, Referral Services, Pre School and Non-Formal Education, Nutrition and Health Education**

Certified Location: Perumal Kovil East Street, Reddiyar Patti (Near by Library), Tirunelveli – 627 007. Tamilnadu, India.

Validity of this certificate can be verified at www.bmscert.org/verify

Director
Director

Initial Registration Date: November 27, 2017
Date of Certificate: November 27, 2017
Valid Upto: November 26, 2018
Recertification Due: November 26, 2020

Q-4418/17
Certificate No.

IAF
DAC
BMSCERT Quality Assessors

317, Aggarwal Modern Bazar, C-33, Lawrence Road, Delhi-35, India



இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள அங்கன்வாடி மையங்கள் அகம் மற்றும் புறம் இரண்டிலும் குழந்தை நேயத்துடனும், நேர்த்தியான கல்வித் திறனுடையதாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 32 மாவட்டங்களில் தலா 4 அங்கன்வாடி மையங்கள் என மொத்தம் 128 மையங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.32.80 இலட்சம் செலவில் அவற்றிற்கு தர அங்கீகார சான்று வழங்கப்பட்டுள்ளன. தேர்வு செய்யப்பட்ட மையங்களின் உட்புறச் சுவரில் படக்கதைகள், தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துகள், எண்கள், குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிப்பு தொடர்பான விளக்கப்படங்கள் வரையப்பட்டுள்ளன. பொழுது போக்கு விளையாட்டு கருவிகளான ஊஞ்சல், சாய்வு பலகை, ஆடும் நாற்காலிகள் ஆகியவைகள் வழங்கப்பட்டுள்ளன.

தனியார் நர்சரி பள்ளிகளுக்கு இணையாக மாதிரி அங்கன்வாடி மையங்களாக மாற்றப்பட்டுள்ளதால், பெற்றோர் தங்கள் குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு அனுப்புவதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நவீன உட்கட்டமைப்புடன் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைகளை தவிர்த்திடும் அங்கன்வாடி மையங்கள் தங்கள் பள்ளிகளின் சுற்றுப்புறத்தில் காய்கறி, மரம் வளர்த்தல், சிறப்பாக பதிவேடுகள் பராமரித்தல் போன்றவற்றின் அடிப்படையில் தர அங்கீகாரம் வழங்கும் நிறுவனங்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அங்கன்வாடி பணியாளர்களிடையே ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பராமரிப்பு குறித்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களிடையே காணப்பட்ட வரவேற்பின் அடிப்படையில் அனைத்து அங்கன்வாடி பணியாளர்களும் தங்களது அங்கன்வாடி மையங்களுக்கும் தர அங்கீகார சான்று பெறுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர்.


# 13. மின்னனு நூலகம் உருவாக்குதல்

தமிழ் நாடு, தமிழ் மொழியின் பண்டைய கலாச்சாரம் பாரம்பரியம் மற்றும் பழமை குறித்த முக்கிய ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் போன்றவற்றின் தொகுப்புகளை மின்னனுவில் கையாளும் வகையில் இத்திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது.



மின்னனு நூலகத்தில், மின்னனு தகவல் உள்ளடிக்கிய தொகுப்புகள் www.tamildigitallbrary.in என்ற வலைதள தேடுதலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த வளைதளத்தில் உலகத்தர (MRC21) படியிலான பட்டியலிடப்பட்டு மின்னனு ஆதாரத்தில் ஒப்பீடு செய்ய வழிவகையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெவ்வேறு வகையான நிறுவனங்களில் இருந்து தொகுக்கப்பட்ட ஏறக்குறைய 24,656 அரியவகை புத்தகங்கள், இதழ்கள் மற்றும் முக்கிய ஆவணங்களில் இருந்து 53,96,877 பக்கங்கள் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளன. இத்தொகுப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 11.10.2017 அன்று அறிமுகப்படுத்தியுள்ளார்.










அவற்றுள், இதுவரையில் 20,450 புத்தகங்கள் மற்றும் இதழ்கள் மின்னனு நூலகம் வாயிலாக பதிவேற்றப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடும்படியாக மிகவும் அரிதான மற்றும் கிடைக்கப்பெறாத மதராஸ் கொரியர் மாதாந்திர இதழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிதான படைப்புகளும் பதிவேற்றப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்யப்பட்ட புத்தகங்களை 37,63,206 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். அவற்றில், 3,81,130 பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. கால முறை பதிப்புகளை 97,037 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர் அவற்றில் 7,292 பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

# 14. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி VIII முதல் XIII வரை மற்றும் 20 மாணவர்கள் ஆய்வேடுகள் அச்சிட்டு வெளியிடுதல்.



தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி




மாணவர்கள் ஆய்வேடுகள்

தமிழ்நாட்டின் பண்டைய சமூக–கலாச்சார நிலையின் வளமான மதிப்பை ஆவணப்படுத்துவதில் தொல்லியல் துறை வெளியீடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை மேம்படுத்த தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகளின் முயற்சிகள் திட்டத்தின் கீழ் உலக சமூகத்தின் பயன்பாட்டிற்காக பண்டைய கல்வெட்டு பற்றிய புத்தகங்களை வெளியிடுவதற்கான நிதி பெறப்பட்டது.

இப்புத்தகங்கள் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருவண்ணாமலை, ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் செழித்து விளங்கிய பண்டையகால கட்டிடக்கலை, சிற்பங்கள், சுவர் ஓவியங்கள், தொல்லியலில் குறிப்பிடத்தக்க தரவுகள், தொல்லியல் ஆர்வலர்கள் மற்றும் அனைத்து தர மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

இப்புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு குறிப்புகள் பண்டைய கலாச்சாரம், அரசு செயல்பாடுகள் வெளிப்படுவதோடு பல்வேறு எழுத்து வடிவங்களை படித்து பொருள் அறியவும் கல்வெட்டு பற்றிய புத்தகங்களின் மூலம் தமிழ்நாட்டில் நிலவிய பண்டைய பொருளாதார நிலையைப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன. ஆகம மற்றும் சிற்ப சாஸ்திரம், மதம் சம்பந்தப்பட்ட விவரங்களும் இப்புத்தகங்களில் உள்ளன. பல்வேறு கடவுள் மற்றும் தெய்வ வடிவங்கள் இப்புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டிய மற்றும் பல்லவ காலத்தின் கலை மற்றும் கட்டிடக்கலை ஆகியவையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 15 . சமுதாய உதவி மையம்

பெண்கள், குழந்தைகள், முதியோர், மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை ஒற்றைச் சாளர முறையில் அளிப்பதற்கு மாவட்ட அளவில் சமுதாய உதவி மைய திட்டமானது, தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ், அக்டோபர் 2017ல், ரூ.1.94 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இந்த மையம் பெண்களின் உரிமைகள், பெண் குழந்தைகளுக்கான சட்டங்கள், ஓய்வூதிய வழிமுறை, கல்வி உதவி, தொழிற்பயிற்சி தொடர்பான தகவல்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அவர்களின் தேவைக்கேற்ப உரிய சேவையை பெற அதிவேக இணையதள மற்றும் தொலைபேசி வசதியுடன் இணைக்கும் தளமாக உள்ளது. தகவல்கள் அளிப்பது மட்டுமல்லாது பயனாளிகள் பிற துறையுடன் தொடர்பு கொள்ள தேவைப்படும் விண்ணப்ப படிவங்கள் நிரப்பவும் உதவி புரிகின்றது. இச்சேவைகள், கிராமப்புற மக்களை சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளிலும், கையேடுகள் வாயிலாகவும், ரேடியோ பிரச்சாரம் மற்றும் குறும்படம் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.




இத்திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் இதுவரை, 2 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இச்சமுதாய உதவி மையத்திற்கென அலுவலர்கள் அமைக்கப்பட்டு தகவல் மற்றும் உதவி கோரி வரும் பொதுமக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் இந்த உதவி மையம் தமிழகத்தில் உள்ள மாவட்ட சமூக நல அலுலகத்தில் செயல்பட்டுவருகிறது.

# தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் - ஓர் அறிமுகம்

"தொலை நோக்கு தமிழ் நாடு 2023" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ் நாட்டை உருவாக்குவதாகும். இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.8.2014 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படி அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இத்திட்டத்தினை செயல்படுத்த, மாநில அரசு புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்கெனவே நடைமுறையிலிருந்த பகுதி – II திட்டத்தை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்காக, 2015–16ஆம் ஆண்டு தொடக்க நிதியாக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யும் பிறகு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது. புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறை படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழி காட்டும் முறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 28 துறைகளுக்கு, 2015–16 முதல் 2018–19 வரையிலான ஆண்டுகளுக்கு ரூ.552.84 கோடி மதிப்பில் 271 புதுமை திட்டடங்கள் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டில், முதல் சுற்றில் ரூ.7.26 கோடி செலவில் 7 திட்டங்கள் அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.



வேளாண் மற்றும் அதனை சார்ந்த துணைத் துறைகளுக்காக இதுவரை 2015–2016 முதல் 2019–20 முதல் சுற்று வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் ரூ.128.32 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட நவீன ரக ஊட்டச்சத்து மிகுந்த அரிசி வகைகளுக்கான திட்டம் மற்றும் புதுமையான பொறியியல் கருவிகள் பயன் படுத்தி மீன் வளர்ச்சி மற்றும் மீன் இறைச்சி கையாளும் முறைத் திட்டம் போன்ற பல விவசாயம் சார்ந்த தொழில் நுட்ப மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.



தொழில் மற்றும் உள் கட்டமைப்பு துறைகளில் பல்வேறு திட்டங்களுக்கு இதுவரை 2015–2016 முதல் 2019–20 முதல்சுற்று வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் ரூ.91.52 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களின் வேலை பளு மற்றும் நேரத்தை குறைத்து அதிக உற்பத்தி செய்ய மின் விசை தூக்கி இயந்திரமும், கைத்தறி ஆடைகளின் விலை மதிப்பை உயர்த்தவும் அதற்கான ஆயத்த ஆடை கண்காட்சி மற்றும் தரமான அங்காடி சந்தை ஏற்படுத்த முக்கிய அங்காடி (Niche Boutiques) போன்ற திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சாலைகளில் ஏற்படும் விபத்து மற்றும் நெரிசல்களை குறைக்க அதற்கான முன்வரைவு மற்றும் முன்னெச்சரிக்கை திட்டம் உள்கட்டமைப்பு மற்றும் (சுகாதார) துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.








சுகாதாரம், கல்வி மற்றும் சமுதாய நலத் துறைகளில் பல்வேறு திட்டங்களுக்கு இதுவரை **2015–2016** முதல் **2019–20** முதல்சுற்று வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி திட்டத்தின் கீழ் ரூ.**288.06** கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மூலக்கூறு கண்டறியும் ஆய்வகத்தை வழங்கி அதன் அடிப்படையில் உடல் தகுதி பரிசோதனை செய்தல், விபத்தில் காயங்களுடன் முகத்தாடை பாதித்த நோயாளிகளுக்கு தாடைப் பகுதி சரிசெய்வதற்கான சிறப்பு சிகிச்சைத் திட்டம், உயர்கல்வி துறை வாயிலாக அண்ணா பல்கலைக் கழகத்திற்கு ஆளில்லா விமானம் (UAV) வடிவமைப்பு மற்றும் சமூக பயன்பாட்டு ஆராய்ச்சிக்கான அடிப்படை கட்டமைப்பு திட்டம், குழந்தைகளுக்கான உடல் தகுதி மற்றும் மனத்தெளிவு பெற்று பள்ளிக் கல்வி பயில ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் வாயிலாக பரிந்துரைக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 2015–2016 முதல் 2019–2020 முதல்சுற்றுவரை )**




மேற்கண்ட துறைகள் தவிர்த்து இதர துறைகளில் பல்வேறு திட்டங்களுக்கு இதுவரை **2015–2016** முதல் **2019–20** முதல்சுற்று வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி திட்டத்தின் கீழ் ரூ.52.20 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கடவுச் சீட்டு வழங்குவதற்கான நேரத்தினை குறைத்தல் மற்றும் கடவு சீட்டு பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்குவதற்கு, எம்–கடவுச்சீட்டு (M-Passport) என்ற காவல்துறை செயலித் திட்டம், ஒரு குற்றத்தின் சரியான காரணம் மற்றும் அதன் அடிப்படை நோக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை மற்றும் விசாரணையினை விரைவாக மேற்கொள்ள காணொளி பதிவுகள் பயன்படுத்துவதற்கான மென்பொருள் திட்டம் போன்ற பல திட்டங்களுக்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சி திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், காவல் துறைக்கு வழங்கப்பட்ட எம் பாஸ்போர்ட் செயலி (M-Passport APP) என்ற திட்டம் மத்திய அரசின் பாராட்டு விருதினைப் பெற்றுள்ளது.

Sunfocus Printers (www.sunfocus.in)













திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.
தமிழ் நாடு அரசு.


தமிழ் நாடு
புத்தாக்க முயற்சிகள் திட்டம்
வெற்றிக்கதைகள்
தமிழ்நாட்டை அறிவு சார்ந்த சிந்தனை மற்றும் புத்தாக்கத்தின் மையமாக
உருவாக்குதல்.... –"தமிழ் நாடு தொலைநோக்கு 2023"